DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC.No. 202/2022
Prosecution witness – P.W.4

| | | |
|---|---|---|
| Name | : **திருமதி.மாணிக்கவள்ளி** | Caste: |
| Husband's Name | : **வீரபாண்டியன்** | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

21.07.2026 –11.20 AM
1 முதல் 5 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.
<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கமுதி காவல் நிலையத்தில் பெண் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பிரகாஷ் என்பவர் 2021–2022ம் ஆகிய ஆண்டுகளில் மேற்படி காவல் நிலையத்தில் பணி புரிந்து தற்போது பணி மாறுதலாகி சென்றுவிட்டார். அவரால் பணிச்சுமை காரணமாக இன்று நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை.அவருடன் பணிபுரிந்த வகையில் அவரது கையெழுத்து மற்றும் கையொப்பம் பற்றி எனக்கு நன்கு தெரியும். அதனடிப்படையில் அவர் சார்பாக ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. மேற்படி சார்பு ஆய்வாளர் திரு.பிரகாஷ் கடந்த 01.12.2021ம் தேதியன்று மதியம் 17.45 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது கமுதி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று மேற்படி மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1யை விசாரித்து அவர் அளித்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து இரவு 19.00 மணிக்கு நிலையம் வந்து குற்ற எண்.781/2021 இதச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2)–ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. அவர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு மறுநாள்

காலை 06.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வேல்முருகன் மற்றும் ரகுநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.4** ஆகவும், அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. பின்னர் சம்பவ சாட்சிகளான சாட்சிப்பட்டியலிலுள்ள 1 முதல் 7 வரையிலான சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவ இட விசாரணையிலும் சாட்சிகளை விசாரித்ததில் எதிரிகள் குற்றச் சம்பவத்தில் ஈடுபட்டது உண்மையென தெரிய வந்ததால் வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் கார்த்திக்முருகன் மற்றும் கடல்ராஜ் ஆகியோரை 02.12.2021 ம் தேதி காலை 11.00 மணியளவில் கானாவிளக்கில் வைத்து கைது செய்து அவர்களை நிலையம் அழைத்து வந்து பாரா காவல் வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

5. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட சூரியா என்ற நபரானவர் இளவர் என்று தெரியவந்ததால் அவரை முறைப்படி இளஞ்சிறார் நீதி குழுமத்தில் ஒப்படைத்துள்ளார். மற்ற எதிரிகள் மாண்புமிகு இராமநாதபுரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்கள் மீது கைது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. பின்னர் அவருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் எதிரி நந்தகுமார் வழக்கு சம்பவ இடத்திற்கு வர உபயோகப்படுத்திய TN 63 BK 0491 என்ற பதிவெண் கொண்ட கிரே கலர் ஏமகா R 15 இருசக்கர வாகனம் ஒன்றை அவரது வீட்டிற்கு பின்புறம் உள்ள கருவக்காட்டில் மறைத்து வைத்திருப்பதாக தகவல் கிடைத்ததால் 04.12.2021 ம் தேதி காலை 11.30 மணியளவில் மேற்படி இடத்திற்கு சென்று மேற்படி இருசக்கர வாகனத்தை சாட்சிகள் வேல்முருகன் மற்றும் ரகுநாதன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து பி.ஆர்.357/2022 என்ற எண்ணையை பெற்றுள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இருசக்கர வாகனத்தை காண்பிக்கும் புகைப்படங்கள் எண்ணம் –4 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வாதிக்கு சிகிச்சை அளித்த அளித்த இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.நெடுங்கிளி என்பவரை விசாரித்து அவர் வாதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியதை பெற்றுள்ளார். **விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. பின்னர் அத்துடன் வழக்கின் புலன் விசாரணையை 07.03.2022ம் தேதியன்று முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் சொல்வது போல் புலன் விசாரணை அதிகாரி புகார் மனு பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

2. நிகழ்நிலை புகார்தாரர் அளித்த பொய்யான புகார் மனுவை பெற்று சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றார் போல் ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.07.21 16:36:29 +0530